அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே




செவ்வாய்க்கிழமை 24.05.2022 supeedsam.com supeedsam@gmail.com

# மருந்துகள் பற்றாக்குறை மரணங்கள் நிகழலாம்



## மருத்துவர்கள் எச்சரிக்கை!

இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக மக்கள் விரைவில் உயிரிழக்கும் ஆபத்து ஏற்படும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தியாவசிய மருந்துகள் இல்லாததன் காரணமாக உயிர்காக்கும் சிகிச்சைகளை மருத்துவமனைகள் பிற்போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள நிலையிலேயே மருத்துவர்கள் இதனை தெரிவித்துள்ளனர்.

இலங்கை 80வீதமான மருந்துகளை இறக்குமதி செய்கின்றது. எனினும் நெருக்கடி காரணமாக அன்னியசெலவாணி முடிவடையும் நிலை காணப்படுவதால்

02 ஆம் பக்கத்தில்...

## மேலும் 08 அமைச்சர்கள் பதவியேற்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் புதிய அரசாங்கத்தின் மிகுதி அமைச்சர்கள் நேற்று திங்கட்கிழமை பதவியேற்றுள்ளனர்.

ஏற்கனவே 13 அமைச்சரவை அமைச்சர்கள் இருவேறு தினங்களில் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். இந்நிலையில் இன்று புதிதாக 10 அமைச்சர்கள் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

அதன்படி சுதந்திரக் கட்சியின் நாடளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர விவசாயம், வனவிலங்கு மற்றும் வனத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ளார். கெஹலிய

02 ஆம் பக்கத்தில்...

## 21வது திருத்தச் சட்டத்தை சீர்குலைக்கும் சதியில் பசில்

### அனைத்து கட்சி போராளிகள் அமைப்பு குற்றச்சாட்டு



21வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை சீர்குலைக்கும் சதித்திட்டத்தில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச ஈடுபட்டுள்ளதாக அனைத்து கட்சி போராளிகள் என்ற அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

இந்த அமைப்பு காலிமுகத் திடலில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள்

02 ஆம் பக்கத்தில்...

## அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது 21 ஆவது திருத்தச்சட்டமூலம்!

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டமூலம், அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் நேற்று திங்கட்கிழமை மாலை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

இதன்போதே 21 ஆவது திருத்தச் சட்டமூலம்

02 ஆம் பக்கத்தில்...

## நோயாளிகளுக்கான சுமார் 300 அத்தியாவசிய மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு?

நோயாளிகளுக்கான சுமார் 300 அத்தியாவசிய மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் ஆயுட்காலத்தை நேரடியாக பாதிக்கும் 25 அத்தியாவசிய மருந்துகள் எந்தவொரு அரச மருத்துவமனைகளிலும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தீவிர இதய நோய்க்கான மருந்துகள், புற்றுநோயாளிகளுக்கான மருந்துகள், நீரிழிவு நோய்க்கான தடுப்பூசிகளான இன்சுலின் போன்றவையே இவ்வாறு அரச மருத்துவமனைகளில் இல்லை என கூறப்படுகிறது.

இந்த 25 மருந்துகளுக்கும் தனியார்துறை மருந்தகங்களிலும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

02 ஆம் பக்கத்தில்...

## பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மட்டு., பேதனா வைத்தியசாலையின் சேவைகள் சிறப்பாக முன்னெடுப்பு



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொரளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேவைகள் சிறப்பாக முன்னெடுக்கப்படுவதாக மக்கள் பாராட்டுத் தெரிவிக்கின்னறனர்.

02 ஆம் பக்கத்தில்...

## எரிபொருள் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிப்பு?

எரிபொருள் விலைகள் நேற்று திங்கட்கிழமை நள்ளிரவு முதல் அதிகரிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய ஒக்டென் 92 ரக பெற்றோல் லீட்டர் ஒன்றின் புதிய விற்பனை விலை 420 ரூபாய் என கூறப்படுகின்றது.

02 ஆம் பக்கத்தில்...

## குரங்கு காய்ச்சல்; வைத்தியர்களுக்கு தெளிவூட்டுவதற்கு நடவடிக்கை!



குரங்கு காய்ச்சல் குறித்து, இலங்கையின் வைத்தியசாலைக் கட்டமைப்பையும், வைத்தியர்களையும் தெளிவூட்டுவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...






# மாணவியை பரீட்சை எழுதாமல் தடுத்த அதிபர்- மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

**(பாறுக் ஷிஹான்)**

மாணவி ஒருவருக்கு பரீட்சை எழுதவிடாது பரீட்சை அனுமதி அட்டையை வழங்காமல் அச்சுறுத்திய அதிபருக்கு எதிராக கல்முனை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாடு பூராகவும் கல்வி பொது சாதாரண பரீட்சை நேற்று திங்கட்கிழமை(23) ஆரம்பித்துள்ள நிலையில் அம்பாறை மாவட்டம் கல்முனை வலயக்கல்வி பணிமனைக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதற்கமைய மாணவியின் தந்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸிடம் வழங்கிய முறைப்பாட்டிற்கமைய மாணவிக்கு பரீட்சை எழுதுவதற்கான பரீட்சை அனுமதி அட்டை பெற்றோர் மற்றும் பிராந்திய இணைப்பாளர் ஆகியோரின் முன்னிலையில் அதிபர் வழங்கியதோடு மன்னிப்பு கோரிக்கையும் விடுத்துள்ளார்.

இருந்த போதிலும் பரீட்சை அனுமதி அட்டை உரிய நேரத்திற்கு அதிபரினால் வழங்கப்படாமையினால் இன்று இடம்பெற்ற பரீட்சைக்கு மாணவி தோற்றவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும் இன்று (24) செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள பரீட்சைக்கு எனது மகள் தோற்றுவது மகிழ்ச்சி அளிப்பதாகவும் உரிய அதிபருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தமைக்கு நன்றி செலுத்துவதாகவும் எனது பிள்ளைக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படாதது போன்று மேலும் ஐந்து மாணவர்களுக்கும் வரவு விடயத்தை காட்டி குறித்த அதிபர் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கவில்லை என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என பாதிக்கப்பட்ட மாணவியின் தந்தை குறிப்பிட்டார்.

இதே வேளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் உள்ளிட்ட உரிய தரப்பினரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் மேற்படி விடயம் தொடர்பில் அதிபருக்கெதிராக உரிய நடவடிக்கை எடுத்துள்ளது.

## எரிபொருள் விலைகள் நேற்று நள்ளிரவு

அத்துடன், ஒக்டென் 95 ரக பெற்றோல் லீட்டர் ஒன்றின் புதிய விற்பனை விலை 450 ரூபாய் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், ஒட்டோ டீசல் லீட்டர் ஒன்றின் விற்பனை விலை 400 ரூபாய் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறே, சுப்பர் டீசல் லீட்டர் ஒன்றின் விற்பனை விலை 445 ரூபாய் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த உத்தியோகப்பூர்வ அறிவித்தல் இன்னும் சற்று நேரத்தில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நாளாந்தம் சுமார் 600 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுவதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், நேற்று மாலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விலை அதிகரிப்பு குறித்து விரிவாகப் பேசப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைய பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொள்ளும் வகையில் இகஇ இனால் இனியும் அத்தகைய இழப்பைத் தாங்க முடியாது எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும், குறைந்த வருமானம் பெறும் மக்களின் பிரச்சினைகளை கருத்திற் கொண்டு மண்ணெண்ணெய் விலையை தற்போதைக்கு அதிகரிப்பதில்லை என தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சரவை வட்டார தகவல்கள் தெரிவித்தன.

## குரங்கு காய்ச்சல்; வைத்தியர்களுக்கு தெளிவூட்டுவதற்கு நடவடிக்கை!

சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பிரதானியான வைத்தியர் சமித கினிகே இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

இந்த நோய் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்கும் நோக்கில், நாட்டுக்கு வந்துள்ள குரங்கு காய்ச்சல் தொற்றுடைய வெளிநாட்டவர்களை அடையாளம்காண, விமான நிலைய தரப்புக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, விமான நிலையத்தில் குரங்கு காய்ச்சல் தொற்றுடைய நோயாளர்களை இனங்கண்டு, அவர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நோய் பரவும் தன்மையானது, கொரோனா பரவல் வேகத்துடன் ஒப்பிடுகையில், குறைந்த மட்டத்தில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் நெருங்கிய தொடர்பைப் பேணும் நபர்களுக்கு இடையே இந்த நோய் இலகுவாக பரவும் தன்மை உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றை கண்டறிவதற்கு பயன்படுத்தப்பட்டதைப் போன்ற உயிரியல் மாதிரி ஆய்வு முறைமையின் ஊடாக இந்த குரங்கு காய்ச்சல் நோயைக் கண்டறிய முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மருந்துகள் பற்றாக்குறை மரணங்கள் நிகழலாம்

அத்தியாவசிய மருந்துகள் முடிவடைகின்ற மருத்துவ கட்டமைப்பு சீர்குலையும் நிலை காணப்படுகின்றது.

கொழும்பின் புறநகர் பகுதியில் உள்ள அபேக்சா புற்றுநோய் மருத்துவமனையில் தட்டுப்பாடு காரணமாக நோயாளிகளும் அவர்களது குடும்பத்தவர்களும் மருத்துவர்களும் எதுவும் செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றனர்-தட்டுப்பாடுகள் பரிசோதனைகளையும் அவசர சத்திரகிசிச்சை உட்பட முக்கிய சிசிச்சைகளையும் ஒத்திவைக்கவேண்டிய நிலையை ஏற்படுத்துகின்றன.

புற்றுநோயாளர்களை பொறுத்தவரை இது மிகவும் மோசமான நிலைமை சில நேரங்களில் காலைகளில் நாங்கள் சில சத்திரசிகிச்சைகளை செய்வோம்இபொருட்கள் இல்லாததால் திட்டமிட்ட நாட்களில் சத்திரசிகிச்சைகளை செய்ய முடியாத நிலையில் உள்ளோம் என மருத்துவர் ரொசான் அமரதுங்க ரொய்ட்டஸிடம் தெரிவித்துள்ளார்.

நிலைமையில் துரிதமாக மாற்றம் ஏற்படாவிட்டால் பல நோயாளிகள் பலர் மரணிக்கக்கூடும் என அவர் தெரிவிக்கின்றார்.

1948 சுதந்திரத்தின் பின்னர் இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது- கொவிட் சுற்றுலாத்துறையை மோசமாக பாதித்ததால் அதிகரித்த எரிபொருள் விலைகளால் பொதுமக்களை கவருவதற்கான வரிச்சலுகைகளால் விவசாயத்தை மோசமாக பாதித்த இரசாயன உரத்தடையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

180 மருந்துகளிற்கு தட்டுப்பாடு காணப்படுகின்றது என மருந்துகள் கொள்வனவுடன் தொடர்புபட்ட அதிகாரியொருவர் தெரிவித்தார். டயலசிஸ் நோயாளிகளிற்கான ஊசிகள் உறுப்பு மாற்று சத்திரசிகிச்சை செய்துகொண்டவர்கள் மற்றும் புற்றுநோயாளர்களிற்கான மருந்துகளிற்கு தட்டுப்பாடு காணப்படுகின்றது.

இந்தியா ஜப்பான் உட்பட உலகநாடுகள் மருந்துபொருட்களை வழங்க முன்வந்துள்ளன ஆனால் அவை வந்தடைவதற்கு நான்கு மாதங்களாகும் என சமன்ரத்நாயக்க என்ற அதிகாரி ரொய்ட்டருக்கு தெரிவித்தார்.

அதேவேளை வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் உள்ளவர்கள் உதவவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நிலைமையின் மோசமான தன்மை பாரதூரம் குறித்து எங்களிற்கே அதிகம் தெரியும் என்பதால் நாங்கள் நோயாளிகள் மருத்துவர்களை விட அதிகம் கவலையடைந்துள்ளோம் என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

பெட்ரோல் சமையல் எரிவாயுவிற்காக காத்திருக்கும் மக்களை சுட்டிக்காட்டும் அரசமருத்துவ அதிகாரிகள்சங்கத்தின் பேச்சாளர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் சிகிச்சைக்காக காத்திருக்கும் மக்களின் நிலை இதனை விட மோசமானது என்கின்றார்.

நோயாளிகள் மருந்திற்காக வரிசையில் நின்றால் அவர்கள் உயிரிழப்பார்கள் என்கின்றார் அவர் .

இரத்தப்புற்றுநோய்க்காக சிகிச்சை பெற்றுவரும் சிறுமியின் தாய் ஒருவர் நாங்கள் மிகவும் அச்சமடைந்துள்ளோம் என தெரிவிக்கின்றார்.

முன்னர்சிகிச்சை காரணமாக எங்களிற்கு முன்னர் நம்பிக்கையிருந்தது தற்போது மிகுந்த அச்சத்தின் கீழ் வாழ்கின்றோம் என அவர் தெரிவிக்கின்றார்.

நாங்கள் நம்பிக்கையற்ற நிலையில் உள்ளோம்இமருந்துகள் தட்டுப்பாடு குறித்து கேள்விப்படும்போது எங்கள் எதிர்காலம் இருளில் மூழ்கின்றது எங்கள் பிள்ளையை வெளிநாட்டிற்கு கொண்டு செல்வதற்கு எங்களிற்கு பணமில்லை என்கின்றார் அவர்.

இந்திய அதிகாரிகள் ஏனைய உணவுப்பொருட்களுடன் 25 தொன் மருந்துகளையும் ஞாயிற்றுக்கிழமை வழங்கியுள்ளனர்.

## பொருளாதார நெருக்கடிகளுக்கு....

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் மருந்துப் பொருட்கள் தட்டுப்பாடு நிலவுவதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கும் நிலைமையிலும் மட்டு போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு, விடுதிகளில் தங்கி இருந்து வைத்திய சேவையினைப் பெற்றுக் கொள்ளும் சேவைகள், கிளினிக் சேவைகள், மகப்பேற்று பரிவு, அரவச சத்திரி சிக்ச்சைப் பிரிவு, அவசர மற்றும் விபத்து பிரிவு, சிறுவர் பிரிவு உட்பட ஆய்வுகூட சேவைகள் மற்றும் அனைத்து பிரிவுகளினது சேவைகளும் தங்கு தடையின்றி இடம்பெற்று வருகின்றன.

இப்போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக வரும் உள்ளூர் மற்றும் வெளிமாவட்ட மக்களின் தேவைகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்பட்டு வருவதாகவும், மக்கள் சிரமமின்றி இலகுவாக சேவையினைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதாகவும் பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மட்டு போதனா வைத்தியசாலையில் கடமைபுரியும் வைத்தியர்கள், தாதிமார் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள், மற்றும் போராட்டங்களுக்கு மத்தியிலும் நோயாளர்கள் விடயத்தில் மிகவும் நேர்த்தியாக அற்பணிப்புடனும் செயலாற்றுகின்றமைக்காகவும், இவ்வான சூழ்நிலையிலும் இவ்வைத்தியசாலை நிர்வாகத்தினை சிறப்பாக வழிநடாத்தும் பணிப்பாளர் டாக்டர் கலாரஞ்ஜினி கனேசலிங்கம் உட்பட அனைத்து வைத்திய அதிகாரிகள், சுகாதர உத்தியோகத்தர்களுக்கும் பொது மக்கள் நன்றி பாராட்டுத் தெரிவிக்கின்றனர்.

## நோயாளிகளுக்கான சுமார் 300...

டொலர் தட்டுப்பாடு மட்டுமின்றி, தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியின் திறமையின்மை மற்றும் மோசமான நிர்வாகமும் இந்த நிலைக்கு முக்கிய காரணம் என சுகாதார அமைச்சக வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மேலும் 08 அமைச்சர்கள் பதவியேற்பு

ரம்புக்வெல்ல நீர் வழங்கல், ரொஷான் ரணசிங்க – நீர்ப்பாசனம், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சராகவும் விதுர விக்ரமநாயக்க பௌத்த, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சராக பதவியேற்றுள்ளார்.

இதேவேளை, டக்ளஸ் தேவானந்தாவிற்கு – கடற்றொழில், பந்துல குணவர்தன – போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சராகவும் ரமேஷ் பத்திரன – கைத்தொழில் நசீர் அஹமட் – சுற்றாடல் அமைச்சராகவும் பதவியேற்றுள்ளார்.

பந்துல குணவர்தன மற்றும் ரொஷான் ரணசிங்க ஆகியோருக்கு மேலதிகமாக இரு அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் நேற்று 10 அமைச்சு பதவிகளுக்கு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளர்.

## அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது

முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த சட்டமூலம் தொடர்பில் கட்சி தலைவர்களின் கருத்துகளை, பெற்ற பின்னர் திருத்தப்பட்ட சட்டமூலத்தை, எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவையில் முன்வைப்பதற்கு இதன்போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

## 21வது திருத்தச் சட்டத்தை சீர்குலைக்கும்

சம்பந்தப்பட்ட அமைப்பா என்பது பற்றிய தகவல்கள் வெளிவரவில்லை.

மக்களை கஷ்டங்களுக்கு உள்ளாக்கி, அராஜக தேசம் உருவாக காரணமாகவும் தன்னிச்சையான அநீதியான ஆட்சிக்கு வழிவகுத்த 20வது திருத்தச் சட்டம் தொடர்பில் நாட்டிற்குள் ஏற்பட்டுள்ள எதிர்ப்பு மற்றும் அதிருப்தி காரணமாக 21 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்படவுள்ளது.

அந்த திருத்தச் சட்டம் இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படுகிறது. எனினும் தோல்வியான ஆட்சி, ஊழல் காரணமாக மக்களால் ஆட்சி அதிகாரத்தில் இருந்து துரத்தப்பட்ட ராஜபக்சவினரின் ஆவிகள், இந்த ஜனநாயக, மக்களுக்கு சார்பான அமைச்சரவை பத்திரம் நிறைவேற்றப்படுவதை தடுக்கவும் காலம் தாழ்த்தவும் நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கவும் சதித்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

இரட்டை குடியுரிமையாளரான பசில் ராஜபக்ச இந்த சதித்திட்டத்தை அரங்கேற்றி வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. மக்களின் உணர்வுகளை மதிக்காது நாட்டை அதளபாதாளத்திற்குள் தள்ளி, மக்களை நடுத்தெருவில் நிறுத்தி ராஜபக்ச குடும்ப ஆட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்தும் குறுகிய நோக்கில் மேற்கொள்ளும் இந்த முயற்சியை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். அரச தலைவர் மாத்திரமல்லாது பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் பசில் ராஜபக்ச என்ற அமெரிக்க பிரஜை முன்னெடுத்துள்ள இந்த அநாகபீகமான மற்றும் மோசமான திட்டத்தை தோற்கடித்து, 21 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைவரும் பேதங்களை மறந்து இணைந்து செயற்படுவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

மேலும் நாட்டுக்காக எனக் கூறி, புதிய அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகளை பெற்றுக்கொண்ட மக்கள் பிரதிநிதிகள், இந்த அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பில் மேற்கொள்ளும் சாதகமான மற்றும் செயற்பாட்டு ரீதியான தலையீடுகளை நாங்கள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம் எனவும் அந்த அனைத்து கட்சி பேராளிகள் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.



# சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு!

## நடவடிக்கை எடுப்பார்களா?





(காரைதீவு நிருபர் சகா)

இது கல்முனை கடற்கரை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு செல்லுகின்ற கோயில் வீதிச் சந்தியின் இன்றைய அவலநிலை.

இங்கு குப்பைகளை கொட்டுபவர்களுக்கு சுற்றாடலில் இருக்கின்ற மக்களின் அசௌகரியங்களைப் பற்றியோ, இவ்வீதியைப் பயன்படுத்தும் மக்களைப் பற்றியோ முக்கியமாக அவ்விடத்தில் பொருத்தப்பட்டுள்ள மின்மாற்றியில் ஏற்படக்கூடிய தீயபாயத்தைப் பற்றியோ எவ்வித அக்கறையுமில்லை.

இந்த சந்தியிலிருந்து மிக குறுகிய தூரத்தில் மசூதி ஒன்று இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த சுற்றாடல் சீர்கேட்டுக்கு யார் பொறுப்பு....?

சம்பந்தப்பட்டவர்கள் இந்த சுற்றாடல் சீரழிவைப் போக்க ஆக்கபூர்வமான நடவடிக்கையினை விரைவில் எடுப்பார்களென நம்புகிறோம்.

# மட்டக்களப்பு வைத்தியசாலை கழிவறையில் தூக்கில் தோங்கிய நிலையில் சடலம் மீட்பு!

(மட்டு. துஷாரா)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்த ஆண் ஒருவர் வைத்தியசாலை விடுதி மலசல கூட ஜன்னல் கம்பியில் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்ட சம்பவம் நேற்று முன்தினம் (22) இரவு இடம்பெற்றுள்ளது.

வவுணதீவு நாவற்காடு பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய சிவலிங்கம் தட்சணாமூர்த்தி என்பவரே இவ்வாறு தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்டார்

தற்கொலை செய்துகொண்டவர் ஒரு மனநோயாளியாகும். அவர் அதற்கான சிகிச்சையை பெற்றுக்கொள்வதற்காகவே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சம்பவதினத்தன்று இரவு விடுதியில் உள்ள நோயாளிகளை வைத்தியர் பார்வையிட்டு சென்றதன் பின்னர் குறித்த நபர் மலசலம் கழிப்பதற்காக சென்றிருந்தார். நேடுநேரமாகியும் அவர் வெளியே வராததையடுத்து அவருக்கு உதவியாக இருந்த உறவினர் கதவை திறந்து போது மலசல கூட ஜன்னல் கம்பியில் உடுத்திருந்த சாரத்தை பயன்படுத்தி தூக்கில் தொங்கி தற்கொலை செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து நீதிமன்ற உத்தரவை பெற்று சடலத்தை பிரேத பரிசோதனைக்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாகவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அந்நியச்சேலாவணியை உள்ளீர்க்கும் பொறுப்புக்கள் எல்லோருக்கும் உடையது

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம், நாட்டின் பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காணும் என்ற நம்பிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதால், புலம்பெயர் இலங்கையர்களும் உதவ முன்வர வேண்டுமென தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மேல்மாகாண முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அந்நியச்செலாவணி வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியை சரிசெய்வதற்கு, நாட்டிற்குள் அதிகளவு டொலர் வரவேண்டும். புலம்பெயர் இலங்கையர்கள், வெளிநாடுகளில் இதைச் சேகரித்து இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பும் முயற்சிகளில் இறங்குவது அவசியம். இவ்விடயத்தில், குறுகிய மனநிலையில் செயற்படக் கூடாது.



சகல கட்சிகளின் தலைவர்களும் ரணில் தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க முன்வந்திருப்பதால், பொருளாதார மேம்பாடுகளை அடைந்துகொள்ளும் வழிகள் விரைவில் திறக்கப்படலாம். எனவே, இளைஞர்கள் இவ்விடயம் பற்றி சிரத்தை கொள்வதுதான் இன்றைய அவசரத் தேவை.

உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பதற்கு தேவையான அமைதியை நாட்டில் கொண்டுவரும் பொறுப்பையும், சுற்றுலாப் பயணிகளை அதிகளவு உள்ளீர்க்கும் சூழலையும் இளைஞர்களே ஏற்படுத்த வேண்டும். தனித்தனி அஜந்தாக்களின் நாட்டின் இன்றைய சூழலை பாவிப்பதற்கு முயல்வது, பொருளாதாரத்தை அடிமட்டத்தில் வீழ்த்தி விடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# காரைதீவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு





(காரைதீவு நிருபர் சகா)

முள்ளிவாய்க்கால் அவலத்தின் 13ஆவது நினைவேந்தல் நிகழ்வு புதன்கிழமை காரைதீவில் இடம்பெற்றது .

தமிழ் தேசிய கூட்டமைப்பின் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நிகழ்வு காரைதீவு பொதுச் சந்தை கட்டிடத்திற்கு முன்னால் இடம்பெற்றது.

முதலில்,அங்கு நெய்விளக்கு ஏற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதன்பின்பு கஞ்சி காய்ச்சி மக்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் , கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சிவஞானம் ஜெயக்குமார் , காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்களான திருமதி.சி.ஜெயராணி, ச.சசிகுமார், தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரமுகர் தா.பிரதீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# போதுப்பணிக்கு தாலியை தானமாக வழங்கிய வீரப்பெண்மணி

## சாந்தினிக்கு குவியும் வாழ்த்துக்கள்: குழுத்தியில் பாராட்டஏற்பாடு!





(காரைதீவு சகா)

பொதுப்பணிக்காக நிதிச்சேகரிக்கையில், தனது தாலியை தானமாக வழங்கினார் ஒரு வீரப்பெண்மணி.

இவ் உணர்ச்சிபூர்வமான சம்பவம், காரைதீவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

காரைதீவின் வடகோடியிலுள்ள காணியொன்று மாற்றினத்தாருக்கு விற்கப்பட்டுவிட்டது.அதனை மீளப்பெறுவதற்காக காரைதீவு அனைத்து ஆலயங்களின் அறங்காவலர் ஒன்றியம் உள்ளிட்ட பொதுப்பணிக் குழுவினர் களத்திலும், புலத்திலுமிருக்கக் கூடிய உணர்வுள்ள காரைதீவு மக்களிடம் நிதி சேகரிப்பீலிடுபட்டார்கள். லட்சக்கணக்கில் மக்கள் உணர்வுபூர்வமாக தாராளமாக நிதியுதவி வழங்கினர்.

காரைதீவு 8ஆம் பிரிவில் நிதி சேகரிப்பில் வீடுவீடு வீடாகச்சென்றபோது ஒரு பெண்மணி தானாக முன்வந்து 'எப்படியாவது அக்காணியை மீட்டெடுங்கள்' என உணர்வுபூர்வமாகக்கூறி தனது கழுத்திலிருந்த 10பவுண் தாலியை கழற்றி குழுவினரிடம் கையளித்தார்.

நிதிசேகரிப்புக்குழுவினர் ஒருகணம் அதிர்ந்துபோனார்கள். காரைதீவு 8ஐச் சேர்ந்த திருமதி சாமித்தம்பி சாந்தினி என்பவரே இவ்விதம் தனது தாலியை பொதுப்பணிக்காக வழங்கியவராவார். ஒரு விவசாயியின் மனைவி அவர். இருந்தும் காரைதீவார் என்ற உணர்வில் அக்காணி கட்டாயம் மீளப்பெறவேண்டும் மண்பாதுகாக்கப்படவேண்டும் என்ற உயரிய நோக்கில் அதனைக்கையளிப்பதாகக்கூறியுள்ளார். அறங்காவலர் ஒன்றியத்தலைவரும், கண்ணகை அம்மன் ஆலய தர்மகர்த்தாவுமான இரா.குணசிங்கம் தலைமையிலான நிதிசேகரிப்புக்குழுவினர் அதனை முறைப்படி நன்றி தெரிவித்து அதனைப்பெற்றுக்கொண்டனர்.

தாலியை தானமாக வழங்கிய செய்தி காட்டுத்தீபோல ஊரெங்கும் பரவியது. மக்கள் அதிர்ந்துபோனார்கள். அதனையடுத்து நேரிலும் சமுகவலைத்தளங்களிலும் அப்பெண்மணியின் ஊர்ப்பற்றினை உணர்வை வியந்து வாழ்த்துக்கள் குவியஆரம்பித்துள்ளன.

புலம்பெயர்தேசத்திலுள்ள உணர்வாளர்களும் இப்பெண்மணியை பாராட்டி கவிதைகளையும், கருத்துக்களையும் வெளியிட்டவண்ணமுள்ளனர். குறித்த காணியை மீட்டெடுக்க தியாகத்துடன் பாடுபட்ட மண்மீட்புக்குழுவினருக்கும் பாராட்டுமழை குவிந்தவண்ணமுள்ளது. ஊருக்கு வேலி போட தாலி வழங்கிய வீரப்பெண்மணியை எதிர்வரும் அம்மனின் குழுத்தி காலத்தில் பாராட்டவேண்டும் என மண்மீட்புக்குழுவினர் கருத்துரைத்துள்ளனர்.

அதுமட்டுமல்ல மண்ணை மீட்டெடுக்கஉதவிய உணர்வாளர்கள் அனைவரையும் பாராட்டவேண்டும் அதேவேளை குறித்த காணியை விற்றவர்களுக்கு ஊரால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

குறித்த காணி மே18 புதனன்று மாலை முறைப்படி உறுதிஎழுதி மீட்டெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாசு படிந்துள்ள கடற்கரை பகுதி தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தினால் சிரமதானப்பணி





( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தின் தீவு பகுதியாக விளங்கும் மன்னார் பிரதேச செயலகப் பிரிவுற்குட்பட்ட தாழ்வுபாடு தொடக்கம் நடுக்குடா வரைக்குமான கடற்கரையோரத்தில் சுற்றுச் சூழல் மிகவும் மாசடைந்து காணப்படுவதால் இதை கவனத்துக்கு எடுத்துக் கொண்ட தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கம் இவற்றை துப்பரவு செய்வதில் கவனம் செலுத்தியுள்ளது

இதற்கமைய ஞாயிற்றுக்கிழமை (22.05.2022) தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வீ.எஸ்.சிவகரன் தலைமையில் தாழ்வுபாடு பங்கு தந்தையும் மனித உரிமை தொடர்பாக செயல்படும் அருட்பணி எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் அவர்களும் இணைந்தவராக பலர் இவ் சிரமதான பணியில் ஈடுபட்டனர். சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரமுள்ள பகுதியில் இன்றையத் தினம் இவ் சிரமாதான பணி இடம்பெற்றது.

இதன்போது கடற்கரைப் பகுதியில் இயற்கைக்கும் சுற்று சூழலுக்கும் கேடு விளைவிக்கும் உக்காத ஆயிரக்கணக்கான பிளாஸ்ரிக் போத்தல்கள் அகற்றப்பட்டுள்ளன.

எதிர்வரும் வாரங்களிலும் இவ்வாறான பணி தொடர்ந்து நடைபெறும் எனதமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வீ.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

# வந்தாறுமூலை 'அகம் ஆதரவு கரங்கள்' அமைப்பால் உலர் உணவுப் போதிகள் வழங்கி வைப்பு









(க.ருத்திரன்)

மட்டக்களப்பு களுவன்கேணியில் தற்போதைய நாட்டின் பொருளாதார நிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவுப் பொதிகளை வந்தாறுமூலை 'அகம் ஆதரவு கரங்கள்' வழங்கி வைத்தனர்.

பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கமைய அகம் ஆதரவு கரங்கள் அமைப்பில் உள்ள மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிகின்ற அங்கத்தவர்களின் நிதிப்பங்களிப்புடன் களத்தில் நின்று செயற்படுகின்ற அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன் இவ் மனிதநேய உதவி வழங்கப்பட்டுள்ளது.எனவே இவ்வுதவியினை வழங்கிய அகம் ஆதரவு கரங்கள் அமைப்பினருக்கு தமது நன்றியை பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

## கல்முனை, சாய்ந்தமருதில் வீசும் துர்வாடை விவகாரம்: நீதிமன்றில் வழக்குத் தாக்கல்; 06 ஆம் திகதி ஆஜராகுமாறு பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

சாய்ந்தமருது பிரதேசத்திலும் கல்முனையின்சில பகுதிகளிலும் அண்மைக்காலமாக வீசும் துர்வாடையைக் கண்டறிந்து, உரிய நடவடிக்கை எடுக்காமைக்கு எதிராக கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி ரொஷான் அக்தர் நேற்று திங்கட்கிழமை (23) இவ்வழகைத் தாக்கல் செய்துள்ளார்.

இம்மனுவில் பிரதிவாதிகளாக கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், சாய்ந்தமருது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, கல்முனை மாநகர சபையின் சுகாதாரவைத்திய அதிகாரி, கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி, மாநகரசபையின் மிருக வைத்திய அதிகாரி, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர், கல்முனை மாநகர ஆணையாளர் உட்பட 08 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்.

இம்மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட கல்முனை நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் அவர்கள், எதிர்வரும் 06ஆம் திகதியன்று வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு தீர்மானித்ததுடன், அன்றைய தினம் நீதிமன்றுக்கு சமூகமளிக்குமாறு, பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்புமாறு உத்தரவிட்டார்.

மனுதாரரான சட்டத்தரணி ரொஷான் அக்தர் சார்பில் சட்டத்தரணிகளான ஆரிப் சம்சுதீன், எம்.எஸ்.ரஸ்ஸாக், ரைசுல் ஹாதி, ஜாவித் ஜெமீல், சுஹால் பிர்தௌஸ் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக சாய்ந்தமருது பிரதேசத்திலும் அண்மைய நாட்களாக கல்முனையின் சில பகுதிகளிலும் மிக மோசமான துர்நாற்றம் வீசி வருகின்ற போதிலும் அத்துர்நாற்றம் எங்கிருந்து வருகின்றது என்பதை துல்லியமாகக் கண்டறியவோ அதனை இல்லாமல் செய்வதற்கோ சந்தேகத்திற்கிடமான இடங்களை முறைப்படி கண்காணிப்பு செய்து, நடவடிக்கை எடுக்கவோ சம்மந்தப்பட்ட அதிகாரிகள் தவறியிருக்கிறார்கள் என குறித்த மனுவில் சுட்டிக்காட்டியிருப்பதாக சட்டத்தரணி ரொஷான் அக்தர் தெரிவித்தார்.

இத்துர்நாற்றத்தினால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த விவகாரம் மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு ஒரு தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே பொது நலன் கருதி 1979ஆம் ஆண்டு 15 ஆம் இழக்க குற்றவியல் நடவடிக்கை கோவையின் பிரிவு 136 (1) (அ) பிரிவின் கீழ் இவ்வழகைத் தாக்கல் செய்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் இளைஞர் யுவதிகளுக்கான மொழித்திறன் விருத்தி செயலமர்வு



**சம்மாந்துறை நிருபர்**

ஆசிய மன்றத்தின் அனுசரணையில் கப்சோ நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட்டு வரும் ''இலங்கையில் சமூக ஒருமைப்பாட்டினை வலுப்படுத்தல் '' எனும் தலைப்பில் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்குடன் அம்பாறை மாவட்ட மூவின இளைஞர், யுவதிகளுக்கான ஒருநாள்மொழித்திறன்விருத்தி (தமிழ்-சிங்களம்) செயலமர்வு ஞாயிற்றுக்கிழமை (22)சம்மாந்துறை விளையாட்டு தொகுதி மண்டபத்தில் நடைபெற்றது.

கப்சோ நிறுவத்தின் திட்ட பணிப்பாளர் ஏ.ஜே காமில் இம்டாட் அவர்களின் தலைமையில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 22 இளைஞர் யுவதிகள் இச் செயலமர்வில் கலந்து கொண்டனர்.அத்தோடு ஏ.எம். எம் முஜீப் இந்த நிகழ்வின் வளவாளராக கலந்து கொண்டதோடு கப்சோ நிறுவனத்தின்கள உத்தியோகத்தர்களான இஸ்மத், ஜப்ரான் மற்றும் சுமன் ஆகியோரும் கலந்து கொண்டனர்..



எதிர்காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் ''நாம் இலங்கையர் ''என்ற தேசிய உணர்வை அம்பாறை மாவட்டத்தில் மேம்படுத்தி ஐக்கியமாக வாழ்வதற்கு மொழி அறிவை எவ்வாறு பயன்படுத்தலாம் ,விருத்தி செய்யலாம் என இங்கு ஆராயப்பட்டது.

கப்சோ நிறுவனமானது எதிர்காலத்தில் பல கட்டங்களாக இந்த இளைஞர் குழு சமூக நல்லிணக்க வேலைத்திட்டங்களை செயற்படுத்த இருப்பதும் குறிப்பிடத்தக்கது.




## வலய மட்ட பெரு விளையாட்டுகளில் கல்முனை உவெஸ்லி சாதனை!





**( காரைதீவு நிருபர் சகா)**

கிழக்குமாகாண கல்வி கலாச்சார விளையாட்டுத்துறை திணைக்களம் நடத்திவரும் கல்முனை வலயத்திற்குட்பட்ட பாடசாலைக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன.

பெரு விளையாட்டுப் போட்டிகளில் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை சாதனை படைத்துள்ளது.

குறிப்பாக 20 வயதுக்கு கீழ்பட்ட பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் முதலிடத்தையும் 20 வயதுக்குட்பட்ட கீழ் பட்ட பெண்களுக்கான எல்லே போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று அதேவேளை 18 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளது.

இவ் அணியினரைப் பாராட்டும் நிகழ்வு கல்லூரி அதிபர் செ.கலையரசன் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை வலய பாடசாலைகளுக்கிடையிலான நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் நான்கு பாடசாலைகளும் எல்லே மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் தலா ஐந்து பாடசாலைகளும் பங்குபற்றின.

இருபது வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் தீவிர சாதனை படைக்கப்பட்டு இருக்கின்றது.

இறுதிப்போட்டியில் கல்முனை உவெஸ்லி உயர்தர கல்லூரியும் கல்முனை ஆர் கே எம் மகா வித்தியாலய அணியும் போட்டியிட்டன.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கல்முனை உவெஸ்லி கல்லூரி அணி 84 ஓட்டங்களைப் பெற்ற அதேவேளை ஆர் கே எம் வித் தியாலயம் 30 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

அதன் காரணமாக 54 ஓட்டங்களால் உயர்தர பாடசாலையின் பெண்கள் அணி வெற்றி ஈட்டியது .

மட்டஇதில் 65 ஓட்டங்களை தன்னந்தனியனாக நின்று வீராங்கனை செல்வி.வி.பிரசாந்தி அந்த ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

அவரையும் அவரது அணியினரையும் அதிபர் செ. கலையரசன் பாராட்டினார் . மாகாணத்திற்கு தெரிவான ஏனைய குழுக்களையும் அதிபர் பாராட்டினார்.

## யாழ் - கதிர்காம பாத யாத்திரை ஜூன் 4 இல் ஆரம்பம்



**( காரைதீவு நிருபர் சகா)**

யாழ்ப்பாணம் கதிர்காம பாத யாத்திரை எதிர்வரும் ஜுன் 4 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

கதிர்காமம் ஆடிவேல் திருவிழாவினை முன்னிட்டு , தொண்டமானாறு செல்வச்சந்தியிலிருந்து கதிர்காமம் நோக்கிய பாத யாத்திரையானது வருடாவருடம் இடம் பெற்று வந்தது.

எனினும், கடந்த இரு ஆண்டுகளாக கொரோனா தீநுண்மியின் தாக்கம் காரணமாக பாதயாத்திரை இடம்பெறவில்லை.

தற்போது காலம் ஓரளவு கனிந்துள்ளது.

எனவே, இந்த வருடம் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கதிர்காமம் நோக்கி பாதயாத்திரையில் பயணிக்கவுள்ளனர்.

அவர்கள் குழுவாகவும் தனியாகவும் பயணிப்பது வழக்கம். பிரதான பாதயாத்திரை குழுவான வேல்சாமி தலைமையிலான குழுவினர் எதிர்வரும் 04.06.2022 காலை 8.00 மணிக்கு தொண்டமானாறு செல்வச்சந்நிதியிலிருந்து புறப்படவுள்ளனர். இதேவேளை, கதிர்காம கந்தனின் ஆடி மகா உற்சவம் ஆடி மாதம் 28ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆவணி மாதம் 11ம் திகதி தீர்த்தோற்சவத்துடன் இனிதே நிறைவடையவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மாவட்ட முப்பெரு விழாவிற்கான ஏற்பாட்டுக் குழு கூட்டம்





**( காரைதீவு நிருபர் சகா)**


அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையின் முப்பெரு விழாவிற்கான ஏற்பாட்டுக் குழு கூட்டம் நேற்று சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பேரவையின் தலைவர் தேசபந்து ஜலீல் ஜீ தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பேரவையின் பொதுச் செயலாளர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா பிரதான உரை நிகழ்த்தினார்.

அங்கு சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி 'அட்சயம்' கவிதைத்தொகுதி நூல்வெளியீடு, 'மங்கையர்திலகம்'விருது வழங்கல் மற்றும் சிறப்பு கவிதைகள் உரைத்தல் தொடர்பாகவும் ஏற்பாட்டு ஒத்திகை நிகழ்ச்சிகளும் இடம்பெற்ற ன.

பேரவையின் நிர்வாக குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தார்கள்.

# ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18 வது ஞாபகார்த்த நிகழ்வும் ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும்!!




**(மட்டக்களப்பு விசேட நிருபர்)**

மட்டக்களப்பில் வைத்து கடந்த 2004 ஆண்டு சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட சிரேஸ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18 வது ஞாபகார்த்த தினம் எதிர்வரும் 31.05.2022 திகதி நினைவு கூரப்படவுள்ள நிலையில், அதனை முன்னிட்டு ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின்

18 ஆவது ஞாபகார்த்த நிகழ்வும் 'ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்' கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் எதிர்வரும் 29.05.2022 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் இ.தேவஅதிரன் தலைமையில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் 29ஆம் திகதி காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ள குறித்த நிகழ்வின்போது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து, நினைவுச் சுடரேற்றப்பட்டதனைத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு, மௌன அஞ்சலியும் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியமும், சிவராம் ஞாபகார்த்த மன்றமும் (சுவிஸ்) இணைந்து வெளியிடவுள்ள 'ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்' கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வின் வரவேற்புரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றிய உப தலைவர் க.ஜெகதீஸ்வரனும், தலைமையுரையினை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான, இ.பாக்கியராஜா நிகழ்த்தவுள்ளதுடன், நூல் வெளியீட்டுரையினை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றிய தலைவர் இ.தேவஅதிரன் நிகழ்த்தவுள்ளார்.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான ஏ.எல்.எம்.சலீம் அவர்களினால் குறித்த நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளதுடன், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான அ.நிக்சன் மற்றும் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான இரா.துரைரெத்தினம் ஆகிய இருவரினாலும் ஊடகர் ஜீ.நடேசன் தொடர்பான சிறப்பு நினைவுப்பகிர்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக் கட்டுரைத் தொகுப்பு நூலில் நடேசனின் நண்பர்கள், பத்திரிகையாளர்கள், நெருக்கமானவர்கள் எனப் பலரும் தமது நினைவகளைப் பகிர்ந்துள்ளனர். கடந்த 2021ஆம் ஆண்டு 1% ஆவது ஞாபகார்த்த தினத்தில் வெளியிடவென உத்தேசிக்கப்பட்டிருந்த போதும் கொவிட் சூழல் காரணமாக குறித்த நூல் வெளியீடானது பிற்போடப்பட்ட நிலையில் இவ்வருடம் வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்விற்கு அனைத்து ஊடகவியலாளர்களையும், சமூக நலன் விரும்பிகள், மதகுருமார், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களையும் இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு ஒன்றியத்தின் செயலாளர் வ.சக்திவேல் அழைப்புவிடுத்துள்ளார்.

# மண்ணெண்ணெய்க்காக அலைமோதும் மக்கள் கூட்டம்








**(ரக்ஸனா)**

நீண்ட நாட்களுக்கப் பின்னர் ஞாயிற்றுக்கிழமை (22) ஏறாவூரிலுள்ளதனியார்எரிபொருள்விற்பனை நிலையத்தில் மண்ணெண்ணெய் கொண்டு வரப்பட்டதையடுத்து அதனைப் பெறுவதற்காக மகக்கள் கூட்டம் அலைமோதியதைக் காணக் கூடியதாக இருந்தது.

அதிகாலையிலேயே வரிசையில் இடம்பிடிக்க ஆண்களும் பெண்களும் முண்டியடித்தனர். தகிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது பெண்களும் வயோதிபர்களும் கூட அவஸ்தைப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

ஒருவருக்கு 300 ரூபாவுக்கான மண்ணெண்ணெய் மாத்திரமே வழங்கப்பட்டது. சுமார் 11 மணித்தியாலம் இந்த மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெற்றது.

எவ்வாறாயினும் வரிசையில் நின்ற அனைவரும் மண்ணெண்ணெய் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியோடு திரும்பிதாக வரிசையில் நின்றோர் தெரிவித்தனர்.

# சீனாவைவிட நாங்கள் இந்தியாவை மிகவும் நேசிக்கின்றோம் கச்சத்தீவை குத்தகைக்கு இந்தியா எடுக்க இருப்பதை மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

**(வாஸ் கூஞ்ஞ)**



கச்சத்தீவு குத்தகை தொடர்பாக அரசாங்கம் அல்லது அமைச்சர் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்ததாக இன்னும் தெரியவில்லை. இருந்தும் இது தொடர்பாக கதைகள் பெரிய அளவில் வந்து கொண்டிருக்கின்றது.எனவே அபிவிருத்தியில் சீனாவைவிட நாங்கள் இந்தியாவை மிகவும் நேசிக்கின்றோம்.சீனா இலங்கையில் மேற்கொண்ட நகரத்தை நாங்கள் எப்படி ஏற்றுக்கொள்ளவில்லையோ அவ்வாறு கச்சத்தீவை குத்தகை அடிப்படையில் இந்தியா பெற இருப்பது மிகவும் சிந்திக்க வேண்டியதொன்றாகும்.என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

திங்கள் கிழமை (23.05.2022) வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மன்னாரிலுள்ள தனது அலுவலகத்தில் ஊடக சந்திப்பொன்றை நடாத்தியபோது அவர் தொடர்ந்து தெரிவிக்கையில

எமது வன்னி மாவட்டத்தில் மண்ணெணெய் இல்லாமையால் கடற்தொழிலாளர்கள் பெரும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதனால் அவர்களின் தொழில் பாரிய அளவில் பாதிப்பு அடைந்த நிலையில் இருந்து வருகின்றது.

இது தொடர்பாக நாங்கள் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்துள்ளோம். முதன்மை அடிப்படையில் விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் எரிபொருள் வழங்க வேண்டும் என்று.

அதற்கு தற்பொழுது உள்ள அமைச்சர் இதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்திருந்தார். இருந்தும் இன்னும் இது சரியான முறையில் கிடைக்கவில்லை என்பது எமது மக்களின் குற்றச் சாட்டுகளாக இருந்து வருகின்றது.

இன்றும் மண்ணெணெய்க்காக நீண்ட வரிசையில் பலர் காவல் இருந்து வருகின்றனர். இவர்கள் வரிசையில் நீண்ட நேரங்களாக காத்திருந்து எரிபொருள் பெறும் இந்த நிலை எமது மீனவர்கள் விவசாயிகளின் தொழில்கள் மேலும் பாதிப்படையும் நிலையே காணப்படுகின்றது.

ஆகவே அரசானது பெற்றோல் டீசலுக்கு காட்டும் அக்கறைபோன்று மண்ணெணெய் விநியோகத்துக்கும் அக்கறை காட்ட வேண்டும் என அரசை வேண்டி நிற்கின்றோம்.

இது தொடர்பாக நாங்கள் பிரதமர் மற்றும் இது தொடர்பான அமைச்சருடனும் தொடர்ந்து வலியுறுத்த இருக்கின்றோம்.

பெற்றோல் டீசல் மற்றும் சமய எரிவாயு இனி தாராளமாக கிடைக்கும் என அரசு தெரிவித்து வருகின்றபோதும் இதை பெறுவதற்காக இரவு இரவாக மக்கள் காவல் காத்து வருவதும் இங்கு கண்கூடாகவே இருக்கின்றது

ஆகவே அரசானது இவ்விடயங்கள்ணீன் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் இவ் ஊடக சந்திப்பில் தெரிவித்ததாவது இந்தியா எமக்கு மேற்கொள்ளும் அபிவிருத்தி திட்டங்களை நாங்கள் வரவேற்கின்றோம்

அதேவேளையில் கச்சத்தீவை குத்தகைக்கு இந்தியா எடுக்க இருப்பதை மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். ஏனென்றால் எமது மீனவர்கள் அந்த பகுதிக்குச் சென்று மீன்பிடிப்பதற்கான வாய்ப்பக்கள் இல்லாது போகும் நிலை உருவாகும்.

கச்சத்தீவு குத்தகை தொடர்பாக அரசாங்கம் அல்லது அமைச்சர் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்ததாக இன்னும் தெரியவில்லை. இருந்தும் இது தொடர்பாக கதைகள் பெரிய அளவில் வந்து கொண்டிருக்கின்றது.

எனவே அபிவிருத்தியில் சீனாவைவிட நாங்கள் இந்தியாவை மிகவும் நேசிக்கின்றோம். எல்லா விதத்திலும் நாங்கள் இந்தியாவை வரவேற்கின்றோம்.

சீனா இலங்கையில் மேற்கொண்ட நகரத்தை நாங்கள் எப்படி ஏற்றுக்கொள்ளவில்லையோ அவ்வாறு கச்சத்தீவை குத்தகை அடிப்படையில் இந்தியா பெற இருப்பது மிகவும் சிந்திக்க வேண்டியதொன்றாகும்.

அத்துடன் பாராளுமன்றத்தில் 21வது சட்டம் முன்மொழிவுக்காக கொண்டுவரப்பட இருக்கின்றது இதை நாங்கள் வரவேற்கின்றோம்.

இருந்தபோதும் அதில் இன்னும் பல விடயங்கள் இணைக்கப்பட வேண்டும் அதாவது தமிழர் தரப்பில் பல பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டியதை பாராளுமன்றம் கவனிக்கப்பட வேண்டும்.

இப்பொழுது இது அமைச்சரவையில் கொடுக்கப்பட்டுள்ளது இது பாராளுமன்ற அமர்வில் கொண்டுவரப்படுகின்றபோது தமிழ் மக்களின் பிரச்சனைகளையும் சேர்க்க வேண்டும் என்ற வழியை நாங்கள் நிச்சயமாக கையாளுவோம்.

ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் குறைக்கப்படுகின்ற அதேவேளையில் மாவட்ட ரீதியாக ஜனாதிபதியின் செயல்பாட்டுக்களை செய்து வருகின்ற ஆளுநர்களின் அதிகாரங்களும் குறைக்கப்பட வேண்டும் எனவும் சிபாரிசு செய்ய இருக்கின்றோம்.

ஆகவே ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆளுநர்களின் அதிகாரங்களும் குறைக்கப்பட வேண்டும்.

தமிழ்தேசிய கூட்டமைப்பு மக்கள் சார்ந்த விடயங்களில் 21வது திருத்தச் சட்டத்தில் ஆதரவு வழங்கும் என இவ்வாறு தெரிவித்தார்.



முன்னாள் இந்திய பிரதமர் பாரத ரத்னா திரு. ராஜீவ் காந்தியின் 31வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு மாணவா் காங்கிரஸ் மாநில பொதுச்செயலாளார் திரு ஆர்.புவனேஸ்வரன், தமிழ்நாடு மாணவா் காங்கிரஸ் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் திரு ஆர். யஷ்வந்த் சாகர் L.L.B ஆகியோர் ஸ்ரீபெரும்புத்தூரில் அமைந்துள்ள ராஜீவ் காந்தியின் நினைவிடத்தில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

**தலவாக்கலை பி.கேதீஸ்**

(அ.அச்சுதன்)

# எழுத்தையும், ஊடகத்தையும் உயிராக போற்றி வாழ்ந்தவர் மோகனதாஸ்..!



மட்டக்களப்பு நகரின் தெற்கே சுமார் 39 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள எல்லைக் கிராமமான துறைநீலாவணையை சேர்ந்த ஆசிரியரும், ஊடகவியலாளரும், கலைஞரும், இளம் எழுத்தாளருமான பாக்கியராஜா மோகனதாஸ் தனது 34ஆவது வயதில் சுகவீனம் காரணமாக கடந்த 23.04.2022 அன்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவர் பாக்கியராஜா சிவராணி தம்பதிகளின் முதலாவது புதல்வராக பிறந்தார். மோகனதாஸ் இவருக்கு இரு பெண் சகோதரிகளும், ஒரு ஆண் சகோதரரும் உள்ளனர் தனது சகோதரி ஒருவரை இழக்க வேண்டிய துன்பகரமான நிகழ்வினை சிறுவயதில் எதிர்கொண்டிருந்தார்.

தனது ஆரம்பக்கல்வி முதல் உயர் தரம் வரை பிறந்த கிராமமான துறைநீலாவணையில் கற்று கிழக்கு பல்கலைக் கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவகத்தின் நுண்கலைத்துறை - நாடகமும் அரங்கியலும் பட்டத்தை பூர்த்தி செய்துள்ளார். கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் ஆசிரியர் நியமனம் பெற்று அம்பாறை மாவட்டத்தின் கழு/சம்மாந்துறை மத்திய




கல்லூரி தேசிய பாடசாலையில் ஆசிரியராக இணைந்து கொண்டார். இவர் சுமார் மூன்று வருடங்கள் தனது பணியில் சிறந்த கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை முன்னெடுத்து ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் நன்மதிப்பினை தனதாக்கிக் கொண்டார்.

ஊடகத்துறையில் அவர் கொண்ட ஆர்வம் காரணமாக 2012ஆம் ஆண்டு ஊடகத்துறைக்குள் நுழைந்து கொண்ட மோகனதாஸ் குறுகிய காலத்திற்குள் கலை அரசியல், சமூகம் சார்ந்து 1000 இற்கும் மேற்பட்ட படைப்புக்களை எழுதிக்குவித்துள்ளார். அவர் எழுத்தையும், ஊடகத்தையும் உயிராக மதித்து தியாக உணர்வோடு தனது சேவையை செய்தவர்.



தேசியப் பத்திரிகைகள் ஊடாக இலங்கையில் பிரபலமான அரசியல்வாதிகள் முதல் உள்ளூராட்சி மன்ற முக்கியஸ்தர்கள் உள்ளூர் சமூக சேவையாளர்கள், எழுத்தாளர்கள் வரை நேர்காணல் செய்து சமகால அரசியல் மற்றும் மக்கள் தொடர்பான பிரச்சினைகள் பற்றி வெளிக்கொணர்ந்தவர்.

ஊடகவியலாளர் பாக்கியராஜா மோகனதாஸின் இறப்புச்செய்தி துறைநீலாவணை கிராமத்தை மாத்திரமின்றி இலங்கை முழுவதிலுமுள்ள தமிழ் பேசும் ஊடக வியலாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், நண்பர்கள் உள்ளிட்ட அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் அதிக ஆளுமையாளர்களின் அனுபவங்களை பேசும் முதல் நேர்காணல் நூல் 'படைபாக்க ஆளுமைகள்' குறுகிய காலத்திலேயே துடிப்போடு செயற்பட்டு சமூகம் சார் பிரச்சினைகளையும் கலைஞர்களின் இதயத்துடிப்பையும் வெளிக்கொணர்ந்தவன் படைப்பாக்க நூலுக்கு சொந்தக்காரன் 74 கலைஞர்களின் நேர்காணல்களை மாத்திரமே தொகுத்து படைப்பாக்க ஆளுமைகள் என்னும் தலைப்பில் நூல் உருவாக்கம் ஒன்றினை செய்து 05.03.2022 அன்று திருகோணமலை சர்வோதய மண்டபத்தில் நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் மூலம் வெளியீடு செய்திருந்தார்.

இந்நூலிலுள்ள நேர்காணல்கள் அனைத்தும் அறிவார்ந்த பெரியோர் பலரின் அனுபவத்திரட்டுகள் மட்டுமின்றி இளையத்தலைமுறையின் அறிவுத் தேடல்களாகவும் இருப்பது கூடுதல் சிறப்பு. எதிர்கால சந்ததிக்கு கேள்விச் சிக்கல்களை அவிழ்க்குமொரு இலக்கிய அமிர்தம் போல் இப்படைப்பும் மோகனதாஸின் பெயரும் ஈழத்து இலக்கிய வரலாற்றில் நிலைத்திருக்கும்.

மோகனதாஸ் மரணிக்கும் வரைகடந்த ஒன்பது வருடங்களாக அவரது பேனா ஓய்ந்ததில்லை பல்துறைகளில் தனது திறமையினை வெளிக்காட்டிய இவருக்கு கடந்த 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமானது இளம் கலைஞர் விருது வழங்கி கௌரவித்தமை இவருடைய கலை இலக்கியத் திறமைக்கு வழங்கப்பட்ட கௌரவமாகும்.

சமூகத்தின் உண்மையான பிரதிநிதிகளாக இருப்பவர்கள் கலைஞர்களும் படைப்பாளர்களும் ஊடகவியலாளர்களுமே சமூகத்தின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் சமூகத்தின் பிரச்சினைகளை சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை அவர்களது உரிமைகளை எழுத்தின் ஊடாக தட்டிக்கேட்பவர்களாக உரிமைகளை பெற்றுக்கொடுப்பவர்களாக இருக்கவேண்டும்.

எப்பொழுதும் நேர்மையாக பயணிப்பது சந்தோஷமாகவே இருக்கும் அப்போது தான் மக்களின் பிரச்சினைகளை தைரியமாக எவருக்கும் பீதியடையாமல் வெளிப்படுத்த முடியும் மற்றவர்களின் தயவுடன் பயணிப்போமாக இருந்தால் சுதந்திரமாகவோ நேர்மையாகவோ செயற்பட முடியாது மக்களுடன் வாழ்ந்து கொண்டு பொது மக்களது பிரச்சினைகளை வெளிப்படுத்துவதென்பது ஒருவித அனுபவம் ஊடகம் என்பது ஒரு தொழில் அல்ல எம்மை நம்பியிருக்கும் மக்களுக்கு களத்தினின்று உணர்வோடு சேவை செய்ய வேண்டிய பணியாகும் என மோகனதாஸ் குறிப்பிடுவார் அது போன்று பயனித்தார்.

இன்னும் இருந்து பல சாதனைகளைப் படைக்க வேண்டிய இளம் ஊடகவியலாளர் பாக்கியராஜா மோகனதாஸ் தனது 34ஆவது வயதில் சுகவீனம் காரணமாக அண்மையில் மரணமடைந்தமை பத்திரிகைத்துறைக்கு ஏற்பட்ட பெருந்துயராகும்.









# காலிமுகத்திடல் தமிழர்களின் வரலாற்றில் மிகவும் முக்கியமான போராட்டக்களமாகவுள்ளது





(பொன்ஆனந்தம் )

இலங்கையில் நடைபெறும் கொடுங்கோல் ஆட்சிக்கெதிராக தற்சமயம் 40 மேற்பட்ட நாட்களாக மாணவர்கள்,இளைஞர்கள் ,மக்கள் இடைவிடாது போராட்டங்களை ஆட்சியாளர்களுக்கெதிராக நடாத்தி வருகின்றனர்.

அந்த போராட்டங்களில் நேரடியாக பங்கெடுக்காவிட்டாலும் அதன் நியாயங்களை நாம் ஏற்று ஆதரித்தவர்களாகவே உள்ளோம்.

என தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரர் க.துரைரெட்ணசிங்கத்தின் ஓராண்டு நினைவு அஞ்சலிநிகழ்வும் நினைவு நூல் வெளியீடும் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் மறைந்த பாரளுமனற் உறுப்பினர் க.துரைரெட்ணசிங்க்கத்தின் குடும்ப்பத்தினரால் நடாத்தப்பட்டது.

இங்கு கலந்து கொண்டு பேசுகையிலேயே தலைவர் மேற்படி கருத்தை தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மறைந்த பாராளுமன்ற உறுப்பினரின் உருவப்படத்திற்கு திருகோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலய ஆதீன கரத்தா சோ.இரவிச்சந்திரக்குரக்கள் நினைவுச் சுடர் ஏற்றி மலரஞ்சலி செய்தார். அதனையடுத்து திருகோணமலை மறை மாவட்ட ஆயர் மலரஞ்சலி செய்தார். இதனையடுத்து கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள்,மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், கல்வியலாளர்கள்,அரசியல் வாதிகள், பொதமக்கள் என பல நூற்றுக்கணக்கில் மலரஞ்சலி செலுத்தினார்கள்.

இங்கு மேலும் பேசிய மாவை குறிப்பிடுகையில்,இன்று நாட்டின் பலபாகங்களிலும் போராட்டங்கள் நடைபெற்ற வண்ணமுள்ளன. அந்த போராட்டத்தின் நியாயங்களை நாம் புரிந்துகொள்கின்றோம் ஏற்றுக் கொள்கின்றோம்.

குறிப்பாக கொழும்பு கோள்பேஸ் கடற்கரையில் இளைஞர்கள் தொடராக போராடி வருகின்றனர். ஆனாலும் நாங்கள் ,எமது மக்கள் நேரடியாக பங்கு கொள்ளாத நிலையிலேயே உள்ளோம். ஏனெனில் இந்த முறைகேடான ஆட்சியாளர்கள் உடன் தமக்கு சாதமகாக இனரீதியாக, சமூக, சமயரீதியாக இந்த நியாயமான போராட்டத்தை மாற்றிவிடுவார்கள். ஆந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இந்த கோள்பேஸ் கடற்கரையில் தான் எமது தமிழரசுக்கட்சியின் தந்தை செல்வாவின் தலமையில் எமது உரிமைகளையும் வலியுறுத்தி எமது கட்சியினர் 1958ம் ஆண்டுகளில் போராடியிருந்தனர்.

குறிப்பாக திருகோணமலையில் பல்வேறு மகாநாடுகள், தீர்மானங்கள் நிறைநேற்றப்பட்டுள்ளன. இங்குள்ள எமது நிலங்கள் பெருமளவில் இந்த இனவாத அரசுகளால் அபகரிக்கப்பட்டு வந்துள்ளன. அந்தகைய ஒரு கூழலிலேயேதான தந்தை செல்வா அதற்கெதிராக போராட்டங்களை முன்னெடுத்ததுடன் தமிழரசுக்கட்சியையும் ஸ்தாபித்தார்.

அந்தவகையில் இங்கு மேற்கொள்ளப்பட்ட நில அபகரிப்பு போன்ற அநிதிக்கெதிராக பல போராட்டங்களை நடாத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது. பல போராட்டங்களும் அந்தக்காலத்தில் நடாத்தப்பட்டு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருந்தன.

அப்படிப்பட்ட சூழ்நிலையை கொண்ட இந்தப்பிரதேசத்தில் இருந்து ஒரு படித்தவராக இந்தப்போராட்டங்களுடன் பிற்காலத்தில் அமரர் துரைரெட்ணசிங்கமும் எம்முடன் இணைந்திருந்தார்.

எங்களுடைய போராட்டங்களில் மதகுருமார், பங்குதந்தையர்களை நாம் மறக்கமுடியாது இங்கும் அவர்கள் கலந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த நேரத்தில் வடகிழக்கு தமிழர்கள் விடுதலை கிடைக்காது தொடரும் இந்த போராட்டங்களில் அனுபவித்த துன்ப துயரங்களை நாம் மறக்கமுடியாது.

இலட்சக்கணக்கான மக்கள் இந்தப்போராட்டத்தில் தமது விடுதலைக்காக பலதுன்ப தயரங்களை அனுபவித்திருக்கின்றார்கள். இந்த நாட்டிலே நடைபெறும் ஆட்சி மிகவும் கெரூரமானதாக இருக்கின்றது. அதன் தலைவர்களுக்கணதிராக ஒரு இளம் சமூகம், கல்வி கற்ற சமூகம் நீண்ட நாட்களாக போரடிணய வண்ணமுள்ளார்கள். இந்தப்போராட்டம் நாட்டின் பல பாகங்களிலும் நடைபெற்ற வண்ணமுள்ளன. ஆட்சியாளர்கள் ஆட்சியை விட்டு போகவெண்டும் என்பதனை வலியுறுத்திப்போராட்டங்கள் நடந்த வண்ணமுள்ளன. நாங்கள் அதில் நேரடியாக பங்கு கொள்வதில் உள்ள நன்மை தீமைகளை ஆராயந்துள்ளோம். அதனால் அதில் நேரடியாக பங்கு கொள்ளாவிட்டாலும் அவர்களுடைய கோரிக்கை, அதிலி உள்ள நியாயங்களை நாங்கள் அதரித்தவர்களாக இருக்கின்றோம்.

இதே காலிமுகத்திடலில்தான் எமது அகிம்சை ரீதியாக உரிமைப்போராட்டத்தை 1958ம் ஆண்டுகளில் எமது தலைவர் தந்தை செல்வா அவர்கள் ஆரம்பித்திருந்தார். இந்தக் காலிமுகத்திடல் தமிழர்களின் வரலாற்றில் மிகவும் முக்கியமான போராட்டக்களமாகவுள்ளது.1956 ஆனி 5ம்திகதி இலங்கையினுடைய ஆட்சி முறையில்ஆட்சி மொழி சிங்களம் மட்டும்தான் என்று எஸ்டபிள்யு.பண்டார நாயக்க கொண்டுவந்தார்.

எஸ்டபிள்யு.பண்டார நாயக்க இந்த நாட்டிற்கு சமட்சி ஆட்சிமுறைதான பொருத்தமானது என்பதனை வலியுறுத்தி பேசிவந்தார். அவர் வடக்கிற்கும் வந்து பேசினார். அந்த நிலையில் பின்னர் இந்த சிங்கள மொழி விடயத்தை கொண்டுவந்தார். அதனை எதிர்த்துதான் இதே காலிமுகத்திடலில் தந்தை செல்வா தலமையில் சத்தியாக்கிரகப்போராட்டத்தை நடாத்தினார்கள்.

சிங்களத்தீவிரவாதிகள் இதனால் தூண்டப்பட்டார்கள். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ,எங்களுடைய போரளிகள் மீது கற்கள்,தடிகளால் தாக்கப்பட்டார்கள் .இரத்தம் சிநிதினார்கள்,

அந்தப்போராட்டங்களை இன்றய போராட்டம் எமக்கு ஞாபகப்படுத்துகின்றது. இத்தகைய தொடர் போராட்டங்கள் மூலம் பல லட்சக்கணக்கான தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.அகிம்சையிலும் சரி ஆயதப்போராட்டத்திலும் சரி இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு இனப்படுகொலைக்குள்ளாக்கப்பட்டார்கள். என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் நிலமைக்கு இந்த நாடு தள்ளப்பட்டுள்ளது பல நாடுகளில் இதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட வண்ணமுள்ளன.எனவும் இங்கு அவர்சுட்டிக் காட்டினார்.

இந்த நிலையில் தென்இலங்கையிலே ஏற்பட்டு வரும் கொடுங்கோல் ஆட்சிகாரணமாக பெரும் பசி, பஞ்சம் பட்டினி ஏற்பட்டுள்ளது. வரும் மாதங்களில் மேலும் அது அதிகரிக்கவேள்ளது என்ற செயதிகளெல்லாம் வந்த வண்ணமுள்ளன.எனவும் தெரிவித்தார்;





## நாட்டில் இடர் களைய வேண்டி ஆலயங்களில் இடர் களையும் பதிகம் பாடும் பாரிய தேசிய திட்டம்

### காரைதீவு சித்தராலயத்தில் ஆரம்பம்







( காரைதீவு நிருபர் சகா)

நாட்டில் சமகாலத்தில் நிலவும் பொருளாதார நெருக்கடி உணவு தட்டுப்பாடு போன்ற இடர்களைய வேண்டி ஆலயங்களில் இடர் களையும் பதிகம் பாடும் பாரிய தேசிய திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரனின் ஒழுங்கமைப்பில் நாடு பூராக தெரிவுசெய்யப்பட்ட ஆலயங்களில் இது நடைபெறவுள்ளது.

இதன் முதல் நிகழ்வு அம்பாறை மாவட்டத்தில் உள்ள காரைதீவில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு ’ீ சித்தானைக்குட்டி சுவாமி ஆலயமும், சித்தானைக்குட்டி அறநெறிப்பாடசாலையும் இணைந்து திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசையும், திருநெடுங்களத்தலத்து இடர் களையும் பதிகம் ஓதும் நிகழ்வும் ஸ்ரீ சித்தானைக்குட்டி ஆலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது ஆலயத்தின் தலைவர் பொன்.பாலந்திரா தலமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு உபதலைவர் க.தட்சணாமூர்த்தி, பொருளாளர் த.தவக்குமார், உபசெயலாளர் திரு செ.விஜயரெத்தினம்,நிர்வாகசபை உறுப்பினர்களான சீ.யோகராஜா, பி.கபாஸ்கர் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவலோஜி சிவராஜா மற்றும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மேற்கொண்டார்.









## சகலகலை அம்மனாலய சங்காபிசேகம்

திருக்கோயில் கள்ளியந்தீவு ஸ்ரீ சகலகலை அம்மன்ஆலய மகா சங்காபிக்ஷேகம் சங்காபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஷ்வர குருக்கள் தலைமையில் நடைபெற்ற போது...

( காரைதீவு நிருபர் சகா)

## பூம் இயந்திரம் கவிழ்ந்ததில் ஒருவர் பலி

(தலவாக்கலை பி.கேதீஸ்)



வெட்டிய மரங்களை ஏற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் லொறி (பூம் இயந்திரம்) ஒன்று நேற்று (23) திங்கட்கிழமை காலை நானுஓயா ரதெல்ல வங்கிஓயா கீழ் பிரிவு தோட்ட வீதியில் வீதியை விட்டு விலகி சுமார் 200 அடி பள்ளத்தில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் மூவர் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் நுவரெலியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்தில் உயிரிழந்தவர் யாரென இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

நேற்று (23) காலை நானுஓயா ரதெல்ல தோட்டத்தில் வெட்டிய மரங்களை ஏற்றுவதற்கும் இழுப்பதற்கும் வங்கிஓயா கீழ்பிரிவு தோட்டத்திலிருந்து ரதல்ல நோக்கிச் சென்றுக் கொண்டிருந்த குறித்த வாகனம் தோட்ட வீதியை விட்டு விலகி 200 அடி பள்ளத்தில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இதில் பயணித்த சாரதி உட்பட ஐவரில் மூவர் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் நுவரெலியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## திருமலையில் அமரர் துரைரட்ணசிங்கம் அவர்களின் ஓராண்டு நினைவு





தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் அவர்களின் ஓராண்டு நினைவு இன்று திருகோணமலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

அமரர் துரைரட்ணசிங்கம் அவர்களின் குடும்பத்தினரின் ஏற்பாட்டில் திருகோணமலை இந்து கலாச்சார மண்டபத்தில் இறை வணக்கத்துடன் நினைவுச் சுடர் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தி ஓராண்டு அஞ்சலி நினைவு கூறப்பட்டது

மறைந்த முன்னாள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்க.துரைரட்ணசிங்கம் அவர்களின் நினைவாக ‘தகைசால் பெரியோர் ’எனும் நினைவு மலரும் இதன்போது வெளியிடப்பட்டதுடன்.

மேலும் அன்னாரின் நினைவாக ‘துரைஆலாபனை’ எனும் தலைப்பில் ஆவணப்படமும் வெளியீடு செய்யப் பட்டது.

இந்நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்,மட்டக் களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் ஆதரவாளர்கள் சமூக ஆர்வலர்கள் குடும்பத்தினர் என பலரும் கலந்து கொண்டிருந்ததுடன்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் க.துரைரட்ணசிங்கம் அவர்கள் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் சேனையூர் பிரதேசத்தை பிறப்பிடமாக கொண்டவரும் திருகோணமலை பிராந்திய கல்வித் திணைக்களத்தின் உதவி கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியவர் என்பதுடன் கடந்த வருடம் கொரோனா தொற்றுக்கு இலக்காகி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இரசாயன உர தட்டுப்பாட்டைக் கண்டித்து விவசாயிகள் போராட்டம்

## ஒரு கிலோ நெல்லை விற்று ஒரு கட்டி சவக்காரம் வாங்க முடியுமா? விவசாயிகள் கேள்வி





(ரக்ஸனா)

இரசாயன உரங்களை விரைவில் வழங்குவதாக அரசாங்கம் உறுதியளித்த போதிலும், இதுவரையில் எவ்வித உரமும் வழங்கப்படவில்லை என விவசாயகள் தெரிவிக்கின்றன. இரசாயன உர இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் அண்மைக் காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

இதனால் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் உரத் தட்டுப்பாடு ஏற்பட தொடங்கியது. இரசாயன உர இறக்குமதிக்கு தடைவிதித்து சேதன உரத்திற்கு மாறுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்தார்.

குறித்த தீர்மானத்திற்கு எதிராக விவசாயிகள் கடந்த சில மாதங்களாக, இரசாயன உர இறக்குமதியை மீண்டும் தொடங்கக் கோரி நாடு முழுவதும் போராட்டங்களை நடத்தி வந்தனர். உரப்பிரச்சினையால் தங்களின் பயிர்கள் குறிப்பாக நெற்பயிர்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரசாயன உர தடையானது நடப்பு ஆண்டில் உணவு உற்பத்தியில் பாரிய வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. குறித்த தீர்மானம் தொடர்பில் ஜனாதிபதி தற்போது கவலை வெளியிட்டுள்ளதுடன்இ இரசாயன உரத்தை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி தெரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இரசாயன உரதட்டுப்பாடு காரணமாக சே



ளக பயிர்ச்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விசேட நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். அரசாங்கத்தின் தோல்வியடைந்த கொள்கைகளால் இலங்கை விவசாயிகள் தற்போது வேறு தொழில்களுக்கு மாறி வருகின்றனர். இலங்கையில் இரண்டு மில்லியன் விவசாயிகள் எவ்வித உதவியும் இன்றி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உள்நாட்டில் அரிசி உற்பத்தி 20 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.உரம் விலை ஏழு மடங்கு அதிகரித்த அதேவேளை விவசாயிகளுக்கு மானியம் கிடைக்காது.

6,000 ரூபாவிற்கு விற்கப்பட்ட 50 கிலோகிராம் தற்போது 45 ஆயிரம் ரூபாவிற்கு மேல் விற்பனை செய்யப்பட்டுவருகின்றது.





**ஆர்.சுசந்த - விவசாயிகள் தொழிற்சங்கத் தலைவர்**

'எதிர்காலத்தில் நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் ஒன்றிணைந்து போராட்டம் நடத்துவார்கள். அப்போதும் அதிகாரிகள் இதில் கவனம் செலுத்துவார்கள். நாட்டில் கடுமையான உணவுப் பற்றாக்குறை ஏற்பட போகின்றது. எங்களுக்கு உரத்தை வழங்குங்கள்'.

**கே சுகதபால - விவசாயிகள் சங்கம்**

'எங்கள் பகுதியில் சுமார் 3000 விவசாயக் குடும்பங்கள் உள்ளன. அவர்கள் அனைவரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அடுத்த போகமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் எங்களிடம் உரங்களோ, விவசாய இரசாயனங்களோ இல்லை. இதனால் நாட்டின் உணவு உற்பத்தியில் பாரிய தாக்கத்தை செலுத்தும்' 'எமக்கு தேவையான எரிபொருள் உரம் மற்றும் மாணியம் கிடைக்கும் வரையில் எமது போராட்டத்தை கைவிட மாட்டடோம்'.

**ஆர்.எம்.விமலாவதி - விவசாயி**

'நெல் ஒரு கிலோ தற்போது 110 ரூபாவிற்கு வழங்கப்படுகின்றது. கடந்த ஆண்டு 55 ரூபாவிற்கே நாங்கள் வாங்கினோம். இது வரைகாலம் எங்களுடைய தேவைகளை நாங்களே பூர்தி செய்து கொண்டோம். நாங்கள் தற்போது பாரிசாவல்களுக்கு முகம் கொடுத்துள்ளோம் ஒரு கிலோகிராம் நெல்லை விற்பனை செய்து ஒரு கட்டி சாவக்காரத்தை வாங்க முடியுமா? என அவர்கள் தெரிவிக்கின்றர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாய மாதிரி கிராமம் அங்குராப்பணம்!!







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் பலையடிவட்டை விவசாய போதனாசிரியர் பிரிவின் கீழ் வரும் கண்ணபுரம் கிராமத்தினை விவசாய மாதிரி கிராமமாக செயற்படுத்த கிழக்கு மாகாண ஆளுனரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் விவசாய உபகரணங்கள் மற்றும் விவசாய உள்ளிட்டு பொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

பசுமை விவசாயத்தின் மூலம் சிறந்த ஆரோக்கியமான உணவு உற்பத்திகளை அறுவடை செய்யவும் சேதன பசளை பாவனை மூலம் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க முடியும் என இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் கலந்து கொண்டதுடன் மட்டக்களப்பு மாவட்ட விவசாய பணிப்பாளர் ஹரிகரன் பிரதி விவசாய பணிப்பாளர் பேரின்பராசா போரதீவுப்பற்று உதவி பிரதேச செயளாலர் துலாஜனன் விவசாய போதனா ஆசிரியர் கோபி, விவசாய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் விவசாய அமைப்பின் உறுப்பினர்கள் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

21 பிரிவின் கீழ் தெரிவு செய்யப்பட விவசாயிகளுக்கு பயன் தரும் விவசாய தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் விவசாய உள்ளீடுகள் என்பன இங்கு வழங்கி வைக்கப்பட்டது.

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

# க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்கு 17238 பரீட்சார்த்திகள்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

நேற்றைய தினம் நாடளாவிய ரீதியில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றவுள்ள நிலையில் இம்முறை கிழக்கு மாகாணத்தில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்கு 28882 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

அதற்கு அமைவாக தமிழ் மொழி மூலம் 22805 பரீட்சார்த்திகளும் சிங்கள மொழி மூலம் 6077 பரீட்சாத்திகளும் அடங்குவர்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் 53 பிராந்திய சேகரிப்பு நிலையங்களும் 407 பரீட்சை நிலையங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 125 பரீட்சை நிலையங்களும், 14 இணைப்பு அலுவலகங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளதுடன், 1%238 மாணவர்கள் இம்முறை பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். இதில் 8053 ஆண் பரீட்சாத்திகளும், 9185 பெண் பரீட்சாத்திகளும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்ப மாவட்டத்தில் க.பொ.த சாதரண தரப்பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ள நிலையில் கொவிட் பாதிப்பேற்பட்ட மாணவர்களுக்கு பரீட்சைகளை எழுத தேவையான ஏற்பாடுகள் உரிய பரீட்சை நிலையத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ள நிலையில் இன்றைய தினம் எந்தவித இடர்பாடுகளும் அற்ற நிலையில் பரீட்சை நிலையங்களில் பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்றுவருகின்றது.





அதனிடையே மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலை சேவையில் ஈடுபடும் (சிசுசரிய) பஸ் வண்டிகளுக்கு தங்கு தடையின்றி எரிபொருளை பெற்றுக்கொடுப்பதற்கான முன்னெடுப்பினை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும், கிழக்கு மாகாண வீதி போக்குவரத்து அதிகார சபை மற்றும் இலங்கை போக்குவரக்கு சபையும் இணைந்து இவர்களுக்கான எரிபொருளினை இலங்கை போக்குவரத்து சபையில் இருந்து பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் யு.யுவநாதன் தெரிவித்தார்.